# கொடைக்கானல் நகராட்சி

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் விதி 2(1)ன் கீழ் 11.04.2022ஆம் நாள் திங்கள் கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர்மன்றத் தலைவர்,
நாள்.07.04.2022 கொடைக்கானல் நகராட்சி.

**பொருள் எண். 1)** பழனி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2021–2022ன்படி கொடைக்கானல் நகராட்சி, சின்ன மாரியம்மன் கோவில் அருகில் அண்ணா நகரில் சமுதாயக் கூடம் அமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு 08.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | கொடைக்கானல் நகராட்சி, சின்ன மாரியம்மன் கோவில் அருகில் அண்ணா நகரில் சமுதாயக் கூடம் அமைத்தல் | 25.00 | பி. முரளி<br><br>எம்.ஆர்.பிலால் இப்ராஉறிம் | 4. 85 % அதிகம் (ரூ.21,44,440/–)<br><br>5.91 %அதிகம் (ரூ.21,66,039/–) |

விலைகுறைப்பு கடிதம் கோரப்பட்டதில் ஒப்பந்ததாரரால் விலை உயர்வு மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் காரணமாக விலை குறைப்பு கடிதம் வழஙக இயலாது என தெரிவித்துள்ளார். எனவே, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு பி. முரளி, ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற மதிப்பீட்டிற்கு கூடுதலான தொகையினை பொது நிதியில் இருந்து வழஙகிடலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **1 , நாள்.11.04.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 2)** கொடைக்கானல் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகளுடன் வருபவர்கள் பாதுகாப்பாக தங்கி செல்லும் வகையில் தங்குமிடம் (Special Shelter) ரூ. 160.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட 09.03.2022 அன்று நடைபெற்ற 8th project Sanctioning Committee under Deendayal Antyodaya Yojana – National Urban Livelihoods Mission ( Day-NULM) கூட்ட நடவடிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Sl. No. | Type of Shelter | Area of Construction | No. of Inmates | Estimate Cost (Rs. In Lakh) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | Construction Cost | O & M Cost | Total Cost |
| 1 | Special Shelter | 3490 Sq.ft | 70 | 160.00 | 8.40 | 168.40 |

வரப்பெற்ற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 20800/2021/UPA1-4 நாள். 21.03.2022 ன் கூட்ட நடவடிக்கைகள் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் பதிவு செய்யலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **2 , நாள்.11.04.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.3**) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்திட கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். W.P 15120/2019–ல் திரு ஜி. சுப்பிரமணிய கௌசிக் என்பவரால் வழக்கு தொடரப்பட்டுள்ளது. நகர் பகுதியில் தண்ணீர் பிளாஸ்டிக் பாட்டில்களின் பயன்பாட்டினை தவிர்க்கும் பொருட்டு சுற்றுலா பயணிகள் அதிகளவில் கூடும் இடங்களில் தானியங்கி சுத்திகரிப்பு குடிநீர் இயந்திரம் அமைத்திட 18.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ இலட் சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | நகராட்சியின் கீழ்க்கண்ட இடங்களில் தானியங்கி குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்துதல்.<br><br>அப்சர்வேட்டரி ரோஜா பூங்கா<br>பிரையண்ட் பூங்கா அருகில்<br>மூஞ்சிக்கல் சந்திப்பு<br>பேருந்து நிலையம் | 10.00 | M/s. Ozone Technology, Chennai<br><br>M/s. Water Care System, Karur | 0.15% குறைவு<br><br>1.75% அதிகம் |
| 2 | ஏரிச்சாலை வாகன நிறுத்தம் அருகில் Automatic air water plant இயந்திரம் பொருத்துதல் | 10.00 | M/s. Ramraj Associates, Chennai.<br><br>M/s. Ecowise Power Solution p Ltd., Bangalore | 0.95% குறைவு<br><br>1.28% அதிகம் |
| 3 | ஏரிச்சாலை பெண்டர்லாக் சந்திப்பு அருகில் Automatic air water plant இயந்திரம் பொருத்துதல் | 10.00 | M/s. Ramraj Associates, Chennai.<br><br>M/s. Ecowise Power Solution p Ltd., Bangalore | 0.98% குறைவு<br><br>1.30% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **3 , நாள்.11.04.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | ஏற்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.4)** கொடைக்கானல் நகராட்சி பகுதியில் உள்ள சாலையோர வியாரிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு 203 நடமாடும் கடைகள் (Vending Cart) ரூ.2,63,22,800.00 மதிப்பீட்டில் அமைத்திட 09.03.2022 அன்று நடைபெற்ற 3rd project Sanctioning Committee under Deendayal Antyodaya Yojana – National Urban Livelihoods Mission (Day-NULM) for Sanction of “ Scheme for Urban Street Vendors” 2021-22 கூட்ட நடவடிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரப்பெற்ற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 20789/2021/UPA1-4 நாள். 21.03.2022 ன் கூட்ட நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலக குறிப்பு. மன்றம் பதிவு செய்யலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **4 , நாள்.11.04.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.5)** கொடைக்கானல் நகராட்சிக்கு பேருந்து நிலைய கடந்த 2010 ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. பேருந்து நிலைய வளாகம் கட்டி முடிக்கப்பட்டதில் இருந்த இந்த கட்டிடத்தின் பராமரிப்புகள் செய்யப்படாமல் அவ்வப்பொழுது பழுது பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது கோடை காலம் துவங்கியுள்ள நிலையில் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் நலன் கருதி பேருந்து நிலையத்தின் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு புதுப்பித்திட பொது நிதியின் கீழ் ரூ.9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கும், செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ள அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **5 , நாள்.11.04.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.6)** கொடைக்கானல் நகராட்சி அண்ணாசாலையில் அமைந்துள்ள தினசரி மார்க்கெட் மேம்பாட்டு பணியினை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22ன் கீழ் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அதன்படி பணிகள் துவக்கப்படவேண்டியுள்ளதால், அண்ணாசாலை தினசரி மார்க்கெட்டில் உள்ள கடைகளை காலிசெய்து மாற்று இடமாக தேர்வு செய்யப்பட்டுள்ள போஸ்ட் ஆபிஸ் சாலையின் மூன்று இடங்களில் தற்காலிகமாக கடைகள் அமைத்து கொடுக்கும் பொருட்டு பொது நிதியின் மூலம் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | கடைகள் அமையப்பட உள்ள இடம் | மதிப்பீடு ரூ. இலட்சம் |
|---|---|---|
| 1 | போஸ்ட் ஆபிஸ் அருகில் | 9.95 |
| 2 | வேலி வியூ எதிர்புறம் | 9.90 |
| 3 | போஸ்ட் ஆபிஸ் சாலை கழிப்பறை முதல் ஏ.எம்.எஸ். பிராய்லர் வரை | 9.70 |

தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **6 , நாள்.11.04.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.7**) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் மற்றும் பொது பயன்பாட்டில் உள்ள ஆழ்துளை கிணறு மின் மோட்டார்களில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட வேண்டியுள்ளது. எனவே, பொதுமக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு உடனுக்குடன் பழுதுகளை சரி செய்திட வேண்டியுள்ளதால் ஆண்டு பராமரிப்பு பணி (2022–23) மேற்கொள்வதற்கு குடிநீர் நிதியின் மூலம் ரூ. 9.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **7 , நாள்.11.04.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.8**) கொடைக்கானல் நகராட்சி அண்ணாசாலையில் அமைந்துள்ள தினசரி மார்க்கெட் மேம்பாட்டு பணியினை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22 கீழ் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை. எனவே, பணியினை துவக்கும் பொருட்டு கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துவதற்கு பொது நிதியின் கீழ் ரூ. 9.90 (ரூ. ஒன்பது இலட்சத்தி தொன்னூறாயிரம் மட்டும்) இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **8 , நாள்.11.04.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.9**) கொடைக்கானல் நகராட்சியின் 1 முதல் 24 வார்டு வரை உள்ள குடிநீர் விநியோகம் சி.ஐ. மற்றும் ஜி.ஐ. குழாய்கள் மூலம் சீரான முறையில் வழஙகப்பட்டு வருகிறது. இந்த விநியோக குழாய்களில் அடிக்கடி குழாய் உடைப்பு ஏற்பட்டு நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே, வார்டு எண். 1 முதல் 24 வரை உள்ள குழாய் உடைப்புகள், குடிநீர் கசிவுகள் மற்றும் வால்வுகளை உடனுக்குடன் சரி செய்திடும் பொருட்டு ஆண்டு பராமரிப்பு பணிகள் (2022–2023) குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **9 , நாள்.11.04.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.10**) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் உள்ள பொது கழிப்பறைகள் மிகவும் பழுதுடைந்து பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும், தற்போது கோடை காலம் ஆரம்பித்து விட்டகாரணத்தினால் சுற்றுலா பயணிகள் அதிகளவில் நகருக்கு வருகை புரிவர் என்பதினால் அனைத்து பொது கழிப்பறைகளையும் மராமத்து செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். எனவே, கீழ்க்கண்ட விவரப்படி நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பறைகளை மராமத்து செய்ய பொது நிதியின் கீழ் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 2 மற்றும் ஏரியினை சுற்றியுள்ள பொது கழிப்பறைகளை மராமத்து செய்தல் | 9.95 |
| 2 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 6 மற்றும் 17 ல் உள்ள பொது கழிப்பறைகளை மராமத்து செய்தல் | 9.80 |
| 3 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 21 மற்றும் 24 ல் உள்ள பொது கழிப்பறைகளை மராமத்து செய்தல் | 9.90 |

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **10 , நாள்.11.04.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.11**) தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் இந்நகராட்சி திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு (ODF) தொடர்ந்து அத்தகைய நிலை கடை பிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் அடுத்த நிலையான ($ODF^{+}$) சான்று மற்றும் GFC (குப்பையில்லா நகரம் STAR RATING) பெறுவதற்கும் நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்நகராட்சியில் 1 முதல் 24 வார்டுகளில் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பகுதிகளாக ($ODF^{+}$) அறிவித்து பொது மக்களிடம் இது தொடர்பாக ஆட்சேபனை கோர நாளிதழ் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டமைக்கு பட்டியல் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | நாளிதழ் விளம்பரம் | பட்டியல் எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | தினத்தந்தி நாளிதழ், திண்டுக்கல் | 2122DGL 231004297, நாள். 04.03.2022 | 5,443/− |
| 2. | தமிழ்சுடர் நாளிதழ், திண்டுக்கல் | A/ADVT/MAR/2022/165, நாள்.04.03.2022 | 12,600/− |

மேற்கண்ட தொகை ரூ.18043/−ஐ (ரூபாய் பதினெட்டாயிரத்து நாற்பத்தி மூன்று மட்டும்) தினத்தந்தி நாளிதழ் மற்றும் தமிழ்சுடர் நாளிதழ், திண்டுக்கல் நிறுவனத்திற்கு தொகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. தூய்மை இந்தியா திட்டப்பணிகள் அவசரம் அவசியம் கருதி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1286/2020/எச்.1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **11 , நாள்.11.04.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | 1. அனுமதிக்கப்பட்டது.<br>2. அனுமதிக்கப்பட்டது.<br>3. அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.12**) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்வதற்காக சென்னை உயர்நீதிமன்றம் W.P.No.15120 of 2019ல் திரு.G.சுப்பிரமணிய கௌசிக் என்பவரால் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கிற்கு நகராட்சி ஆணையாளர் அவர்களை 6வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட வழக்கினை அரசு வழக்கறிஞர் டாக்டர் T.சீனிவாசன் அவர்கள் மூலம் இந்நகராட்சி சார்பாக வழக்கு நடத்தவும் அதற்கான வழக்கு கட்டணம் செலவுத் தொகை ரூ.15,000/- ஆகும்.

மேற்கண்ட வழக்கு கட்டணம் ரூ.15,000/-ஐ (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) டாக்டர் T.சீனிவாசன் வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்குவதற்கு இந்நகராட்சி வருவாய் நிதயிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.885/2017/எச்.1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **12 , நாள்.11.04.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.13**) கொடைக்கானல் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு-பி, பிளாக்-4, நகரளவு எண்.29, 31, பாதை வார்டு-பி, பிளாக் எண்.4, நகரளவு எண்.31 பூஸ்திதி பாதை ஆக்கிரமைப்பை அகற்றுவது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு.ஒளி.கே.டியூப்ரோ என்பவரால் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்து அதில் நகராட்சி ஆணையாளரை 7வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு, மேற்படி வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் நடைபெற்று வருவதால், வழக்கிற்கான வக்காலத்து படிவம் மற்றும் எதிர்வாதுரை விபரங்கள் தயார் செய்யப்பட்டு சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.T.S. முகமது முகைதீன் அவர்களிடம் சமர்ப்பித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தி நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெற்றுத்தர கோரப்பட்டுள்ளது. 29.3.2022ம் தேதிய வழக்கறிஞரின் கடிதத்தில் மேற்கண்ட வழக்கு சம்மந்தமாக சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆஜராகி வழக்கினை நடத்திட வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/-(ரூபாய் பதினைந்தாயிடம்) வழங்க கோரி பட்டியல் கடிதம் சமர்ப்பித்துள்ளார். இவ்வழக்கிற்கான கட்டணத்தை வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண். | வழக்கு எண் | பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | W.P.No.10546 of 2013 | திரு. ஒளி..கே.டியூப்ரோ | 15,000/- |
| | | மொத்தம் | 15,000/- |

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம். (ந.க.எண்.8565/2009/எப்1)

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **13 , நாள்.11.04.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.14**) கொடைக்கானல் நகராட்சிப் பகுதியில் அனுமதியற்ற / அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டுமானங்கள்,ஆக்கிரமிப்புகள் தொடர்பான கீழ்க்கண்ட வழக்குகள் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டு ஆணையாளரை பிரதிவாதியாக சேர்க்கப்பட்ட வழக்கு நடைபெற்று வருகிறது. இவ்வழக்குகளை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.T.S. முகமது முகைதீன் அவர்களால் நகராட்சி சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. இவ்வழக்குகளுக்கு வழக்கு கட்டணமாக ஒரு வழக்கிற்கு ரூ.10,000/- வீதம் இரண்டு வழக்குகளுக்கு ரூ.20,000/- வழங்க கோரி பட்டியல் சமர்ப்பித்துள்ளார். இவ்வழக்குகளுக்கான கட்டணத்தை வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண். | வழக்கு எண். | பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | CP.NO.1405 OF 2021 | சி.ஜெயபால் | 10,000/- |
| 2 | W.P(MD)No.22451 of 2021 | இ.எம்.சி.பழனியப்பன் | 10,000/- |
| | | மொத்தம் | 20,000/- |

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். (ந.க.எண்.420/2004/எப்1)

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **14 , நாள்.11.04.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.15**) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 19.12.2012 அன்று அறிவிக்கப்பட்ட கீழ்க்குண்டாறு குடிநீர்த் திட்டத்தினை நகராட்சியால் செயல்படுத்திட வனத்துறைக்குச் சொந்தமான 0,45 ஹெக்டேர் நிலத்தினை கொடைக்கானல் நகராட்சிக்கு மாற்றம் செய்ய அரசாணை எண்.142 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள். 12.9.2013ன்படி வனத்துறையின் அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி வனத்துறை நிலத்தினை குத்தகையாக கடந்த 2013-2014 முதல் 2019-2020 வரை செலுத்தப்பட்டு விட்டது. மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் கொடைக்கானல் அவர்களின் கடிதம் எண்.5446/2010/வ1,நாள்.10.1.2022ன்படி 2020-2021 மற்றும் 2021-022 ஆண்டிற்கான தொகை ரூ.5,81,400/-+ரூ.5,81,400/-ஆகமொத்தம் ரூ.11,62,800/-இரண்டு ஆண்டுகளுக்கு செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே 2020-2021 மற்றும் 2021-022 ஆண்டிற்கான தொகையை வனத்துறைக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு - 1)அனுமதிக்கலாம். (கோப்பு எண்.8068/2010/எப்1)
2)குடிநீர் நிதியில் வழங்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **15 , நாள்.11.04.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண்.16**) கொடைக்கானல் நகராட்சி 1899ல் தோற்றுவிக்கப்பட்டு 16.04.1991 ஆம் தேதிய அரசாணை எண். 121 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின்படி 16.04.1991 முதல் சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 21.45 சதுர கிலோ மீட்டர ஆகும். இந்நகராட்சியில், நகரின் எல்லையில் இருந்து 4 கிலோ மீட்டர் துரத்தில் தலைமை நீரேற்று நிலையமும், நகரின் மையத்தில் இருந்து 14 கிலோ மீட்டர் துரத்தில் நகராட்சி உரக்கிடங்கும் அமைந்துள்ளது. இந்நகராட்சி பகுதியில் 24.10 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலை சாலையும், 126.16 கிலோ மீட்டர் நகராட்சி சாலையும் உள்ளது. இந்நகராட்சி பகுதியின் நில அமைப்பானது மலைகள், பள்ளத்தாக்குகளையும், மேடு பள்ளங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது.

கொடைக்கானல் நகராட்சியில் அலுவலக பணியின் நிமித்தம் தற்போது இந்நகராட்சியில் மூன்று எண்ணம் ஈப்பு வாகனங்கள் இயக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 1473/2022/பி1 நாள். 01.04.2022 ன் படி சிறப்பு நிலை நகராட்சிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஈப்பு வாகனங்களின் எண்ணிக்கை 5 ஆகும். தற்போது நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2022 முடிவுற்றுள்ள நிலையில் நகர்மன்றத் தலைவருக்கு வாகனம் வழங்கப்படாமல் உள்ளது. மேலும், நகர் பகுதியில் நடைபெறும் திட்டப் பணிகளை ஆய்வு செய்வதற்கு நகராட்சி பொறியாளருக்கு வாகனம் ஏதும் இல்லாத நிலையில் உள்ளது. எனவே, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் சுற்றறிக்கையின்படி இந்நகராட்சிக்கு இரண்டு ஈப்பு வாகனங்கள் பற்றாக்குறையாக உள்ளது. எனவே, பற்றாக்குறையாக உள்ள இரண்டு ஈப்பு வாகனங்களை பொது நிதி மற்றும் குடிநீர் நிதியின் மூலம் அரசு GEM விலை விகிதத்தில் வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 27.00 இலட்சம் ஆகும்.

1) நகர்மன்றத் தலைவர் வாகனம் (Mahndra Scorpio S3 Plus )– பொது நிதி
2)நகராட்சி பொறியாளர் வாகனம் (Mahndra Bolero B6) – குடிநீர் நிதி

அலுவலக குறிப்பு.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணை அனுப்பி, அனுமதி பெற்று வாங்கிக் கொள்ள அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **16 , நாள்.11.04.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–பா.செல்லத்துரை,
**நகர்மன்றத் தலைவர்,**
**கொடைக்கானல் நகராட்சி.**

/ உ.ந.உ.அ /

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.